Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# The Magnificence of Sky and Rain in *Thirukkural*

**Dr. S.Tamiliniyan,** Assistant Professor of Tamil, St. Xavier's College, Palayamkottai, Tamil Nadu. India.
**ORCiD: https://orcid.org/0000-0003-4751-452x**
**DOI: 10.5281/zenodo.6621091**

## Abstract

*Ayyan Valluvar has conveyed various messages to the world through the ever didactic "Thirukkural'. The Tamil society sees the natural elements are seen as a rare medicine to their lives. Thiruvalluvar is an authority and explains the magnificence of water as one of the basic necessities of human life and the significance of rain is glorified in the "Thirukkural". This article aims to explore the notion of nature evinced in the didactic treatise in a special manner.*

**Keywords:** Magnificence, Sky, Rain, *Thirukkural*.

## References

[1] P.S. Aasarya, *Thirukural*, Narmatha Pathipagam, Chennai, 2020.
[2] Kalaga Release, *Pathinonkeelkanaku*, Naladiar Tirunelveli Saiva Sithantha Noorpathipagam, Chennai, 2007.
[3] C.Ganasayar, *Thokappiya Uraithogai* 3, Tamilmann Pathipagam, Chennai, 1943.
[4] Dr. K.V.Balasubramanian, *Poorananooru*, New Century Book House (P) Lt. Chennai 2004.
[5] Pathnonkeelkanaku 1, *Nanmanikadigai*, Manavar Pathipagam, Chennai, 2014.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# *திருக்குறள்* வெளிப்படுத்தும் வான் மழையின் மகத்துவம்

**முனைவர் ச.தமிழினியன்,** தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், தூய சவேரியார் கல்லூரி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-4751-452x**
**DOI: 10.5281/zenodo.6621091**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகப் பொதுமறையான திருக்குறளில் அய்யன் வள்ளுவர் பல்வேறு செய்திகளை எடுத்துரைத்துள்ளார். இந்த மானிடச் சமுதாயம் அறவழியில் இயங்கிட அரிய மருந்தாக குறளல் உள்ள கருத்துக்கள் காணப்படுகின்றன. மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான நீரின் மகத்துவத்தையும், வான் மழையின் சிறப்பையும் தனி அதிகாரம் அமைத்து அதன் மூலம் விளக்குகிறார். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த வான் சிறப்பு அதிகாரத்தில் உள்ள குறட்பாக்கள் கூறும் கருத்தை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.*

**கருச்சொற்கள்:** *திருக்குறள்*, உலக இலக்கியம், வான்மழை, மகத்துவம்.

**முன்னுரை**

உலகில் எத்தனையோ புகழ்பெற்ற நூல்கள் தோன்றியிருந்தாலும் மக்கள் அனைவராலும் விரும்பி கற்கப்படும் உலகப் பொதுமறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல் திருக்குறள் ஆகும். காலந்தோறும் இலக்கிய வகைகள் தோன்றி வளர்ந்து வந்தாலும் என்றும் மாறாத புதுமையுடன் திகழ்வது திருக்குறளே. காரணம், அதில் கூறப்பட்டுள்ள கருத்துகளாகும். திருக்குறள் அறத்தை விரும்புவார்க்கு அறநூலாகவும் பொருளை விழைவார்க்கு உயர்வான பொருள் நூலாகவும் நல்வழி காட்டும் அரசியல் நூலாகவும் இல்லத்தை இனிதே நடத்த நல்ல துணை நூலாகவும் விளங்குகிறது. இத்தகையச் சிறப்பும் பெருமையும் வாய்ந்த திருக்குறளில் இடம்பெறும் வான்சிறப்பு குறித்து வள்ளுவர் வழி நின்று விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வள்ளுவரும் வானமும்**

பரந்து விரிந்த இந்த உலகில் கூடாரமாகத் திகழும் வானம், இயற்கையின் அருட்கொடைகளில் ஒன்றாகும். வானம் பல்வேறு வாழ்வியல் உண்மைகளை நமக்குக் கற்றுத்தருகிறது. இந்த பூமி பந்து முறையாக சுழலுவதற்கு வானத்தின் செயல்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதனால் தான் கடவுள் வாழ்த்தை அடுத்து வான்சிறப்பு எனும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்துள்ளார். இறைவனுடைய அருளால் உலகத்து உயிர்கள் தோன்றுகின்றன. அவற்றிற்கு நன்மை அளிக்கும் உறுதிப் பொருள்களாய் அறம், பொருள், இன்பம் அமைகின்றது. இவை முறையாக நடைபெறுவதற்கு வான்மழையின் பங்களிப்பு தேவையாகும்.

**“விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது” (குறள்-16)**

வானத்திலிருந்து மழைத்துளி விழாவிட்டால் பூமியில் பசுமையான புல்லின் முனையை கூட காண முடியாது என்கிறார் வள்ளுவர். மேலும்,

**“நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**

**வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள் 20)**

எத்தகைய மேம்பட்டவருக்கும் தண்ணீர் இல்லாமல் உலகியல் அமையாது. அந்தத் தண்ணீரும் வானம் வழங்காமல் வராது என்று தௌ;ளத் தெளிவாக வானத்தின் சிறப்பு குறித்தும் நீரின் இன்றியமையாமையும் உணர்த்தப்படுகிறது.

**மழையே அமுதமாகும்**

நீர் என்பது மனித வாழ்வில் அடிப்படையான ஒன்றாகும். இந்த நீர்தான் அனைத்துக்கும் ஆதாரமாக திகழ்கிறது, நீரை மனிதன் பல நிலைகளிலிருந்தும் பெற முயலுகின்றான். செயற்கையான முறையில் நீரை உருவாக்க பல்வேறு முயற்சிகளையும் செய்து வருகின்றனர். இருப்பினும் இன்றைய நாள் வரைக்கும் இந்த பூமியில் வாழக்கூடிய அனைத்து உயிர்களும் நீரின் தேவைக்காக வான் மழையை தான் நம்பி இருக்கின்றன. சில நேரங்களில் வான்மழை இந்த ஜீவராசிகளுக்காக வாரி வழங்கும் நீரின் அளவை குறைத்துக் கொள்வது உண்டு, அந்தக் காலங்களில் போதிய நீரியின்மையால் மக்கள் படும் துயரம் சொல்லில் அடங்காது, இந்தக் காரணங்கள்தான் மழைநீரை சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு உருவாக அடிப்படையாக இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு மழைநீரானது மக்களின் மனங்களிலும் வாழ்விலும் ஒன்றி கலந்திருப்பதை நம்மால் அறிய முடிகிறது.

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று" (குறள் - 11)**

மழை இடைவிடாமல் பெய்வதால் உலகிலுள்ள உயிர்கள் வாழ்ந்து வருகின்றன. ஆதலால், அம்மழையே அமிழ்தம் என்று கூறப்படும் தன்மை உடையதாகும்.

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை" (குறள் - 12)**

உண்பவர்களுக்கு நல்ல உணவு பொருள்களை உற்பத்தி செய்வது மழை, அதை உண்பவர்களுக்கு தானும் உணவாக இருப்பதும் மழையேயாகும்.

**உழவர்களும் உழவுத்தொழிலும்**

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது தொழில்வளம் ஆகும். தொழில் தொடர்ந்து நடைபெறவில்லையென்றால் அந்த நாட்டில் பொருளாதாரம் நலிவுறும், தொழிலாளர்களும் துன்புறுவர். உலகில் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் நடைபெறுகின்ற தொழில்கள் அனைத்தையும் ஆறு வகையில் வகுத்து கூறுகின்றனர். அவை உழவர், வணிகர், ஆசிரியர், கம்மியர், கலைஞர், மருத்துவர் ஆகியோராவர். அறிவு வளர்ச்சியின் காரணமாக பல்வேறு வகைகளில் தொழில் முறைகள் வேறுபட்டுத் தோன்றினாலும் அனைத்தும் பெரும்பான்மையான பொதுத் தன்மையில் இந்த ஆறு வகைக்குள் அடங்கும் என்று அறிதல் வேண்டும். இந்த தொழில்களில் முதன்மையாக நிற்பது உழவுத் தொழிலும் அதற்குத் துணை செய்ய மழையும் தேவையான ஒன்றாகும்.

நீர்வளமும் நிலவளமும் உடைய தமிழ்நாட்டில் பண்டையகாலம் முதல் பயிர்த்தொழிலே சிறந்த தொழிலாகக் கருதப்பட்டு வருகின்றது. முற்காலத் தமிழர் தொழுதுண்டு வாழவிரும்பினார் அல்லர், உழுதுண்டு வாழவே விரும்பினார்கள். 'சீரைத்தேடின் ஏரைத்தேடு' என்றார் ஒரு புலவர். ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு மழை இன்றியமையாதது. தாய் முகங்காணா பிள்ளையும் மழை முகங்காணா பயிரும் செழிப்படைவதில்லை. ஆகவே தமிழர்கள் வானத்திலே தவழும் மேகத்தை நோக்கியே

வாழ்ந்தார்கள். ஓங்கி உயர்ந்த மலைகளில் மழைமேகம் தவழக்கண்டால், தமிழர் உள்ளம் தழைக்கும். கார்மேகத்தின் இடையே மின்னலைக் கண்டால் அவர் உள்ளம் துள்ளி மகிழும். மழைக்கான அறிகுறிகளைக் கண்டு உழவர் அடையும் ஆனந்தக் களிப்பைத் தமிழ்ப்பாடல்களிலே காணலாம்.

**"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வார்ப வளங்குன்றிக் கால்" (குறள் - 14)**

மேகம் சூழ்ந்து மழை பெய்யா விடின், ஏர் உழும், உழவர்களும் உழவுத்தொழிலை செய்ய மாட்டார்கள்.

**கார்மேகம்**

வானத்திலே திரண்டு எழுந்து செல்லும் மழைமேகத்தைக் கருணையின் வடிவமாக தமிழர்கள் போற்றினார்கள். கார்மேகமே உள்ளத்தைக் காக்கும் என்று கருதி கைதொழுதார்கள். மண்ணுயிரை எல்லாம் காத்தருளும் தெய்வமமாகிய, திருமாலுக்கும் அவ்வண்ணத்தையே அமைத்தார்கள். 'கருமுகில் வண்ணன் என் கண்ணன்' என்றார்கள். திருவேங்கடம் என்னும் திருப்பதி மலையில் அப்பெருமான் நின்றருளும் கோலத்தை கருமேகத்தின் வடிவாகவே காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

**"வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்**
**ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை ....**
**செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"**

என்று சிறப்பித்துக் கூறுகிறது. *சிலப்பதிகாரம்* கருமேகத்தின் வண்ணம் அருமையான வண்ணமாக அழகான வண்ணமாகத் தமிழருக்கு தோன்றிற்று. அதனாலேயே அழகுடைய மேகத்தை அவர்கள் 'எழிலி' என்னும் சொல்லால் குறித்தார்கள். எழில் என்பது அழகு. எழில் வாய்ந்த பொருள் எழிலி ஆகும். திருவள்ளுவர் 'எழிலி' என்ற சொல்லை 'இனிது' என்று எடுத்தாளுகிறார்.

**"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி**
**தான்நல்கா தாகி விடின்" (குறள் - 17)**

மேகம் தன் இயல்பைக் குறைத்துக் கடலில், மழைப் பெய்யாவிட்டால் அளவற்ற நீரையடைய கடலும் தன் இயல்பில் குறையும்.

**தானமும் தவமும்**

தானம் என்பது நாமாக முன்வந்து பிறருக்கு அளிப்பது. உதாரணமாக அன்ன தானத்தைக் குறிப்பிடலாம். எனவேதான் தானத்தில் சிறந்தது அன்னதானம் என்று கூறப்படுகிறது. தவம் என்பது ஐம்புலனை அடக்கி ஆள்வதாகும். மாமனிதர்களே தவ வாழ்வை மேற்கொள்கின்றனர். இத்தகைய இரண்டு நிகழ்வுகளும் இம்மண்ணில் நிலைபெற வான்மழையே அடிப்படை ஆதாரமாகின்றது.

**"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்காது எனின்" (குறள் - 19)**

மழை பெய்யாவிட்டால் அகன்ற இவ்வுலகில் மக்கள் செய்யும் தானம் தவம் ஆகிய இரண்டு அறங்களும் நடைபெறாது.

**முடிவுரை**

வாழ்க்கைக்குச் சிறந்த துணையாகவும் நல்ல வழிகாட்டியாகவும் அமைந்திருப்பது திருக்குறள் எனப்படும் உலகப் பொதுமறையாகும். "எல்லாப் பொருளும் இதன்பால் உள" என்று பெரும்புலவர்கள் பாராட்டிருப்பது வெளிப்படையான உண்மையாகும். அந்த வகையில் வான்சிறப்பு குறித்து இக்கட்டுரை அலசி ஆராய்ந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] பி.எஸ். ஆச்சார்யா (உ.ஆ) திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை, 2020.

[2] பதினெண்கீழ்க்கணக்கு, நாடியார், திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்பகம், சென்னை, 2007.

[3] சி.கணேசையர், தொல்காப்பிய உரைத்தொகை 3, தமிழ் மண் பதிப்பகம், சென்னை, 1943.

[4] முனைவர் கு.வே.பாலசுப்பிரமணியன், புறநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[5] பதினெண்கீழ்கணக்கு 1, நான்மணிக்கடிகை, மாணவர் பதிப்பகம், சென்னை, 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.